
பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 23 சனிக்கிழமை 07.05.2022 கதிர் 76

## அவசரகாலச் சட்டத்துக்கு எதிராகக் கனடா கண்டனம்



இலங்கையில் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தீர்மானம் குறித்து கனேடியத் தூதுவர் டேவிட் மெக்கின்னன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த வாரங்களாக, இலங்கை ☞2

# எதற்கும் அஞ்சவேமாட்டோம்; எங்கள் போராட்டம் தொடரும்



### காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் சூளுரை; அவசரகாலச் சட்டத்துக்குக் கடுமையான எதிர்ப்பு

அமைதியான எமது போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்கவே, அரசு, அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. இதற்கு நாம் அஞ்ச போவதில்லை. போராட்டம் தொடரும்.

- இவ்வாறு கொழும்பு - காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அவர் தலைமையிலான அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி காலிமுகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டுப் மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டம் இன்று 29 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ள நிலையிலும் போராட்டம் தொடர்கின்றது. ☞2

# மிரட்டவும் முடியாது; விரட்டவும் முடியாது!

### ‘மொட்டு’வின் சிரேஷ்ட உறுப்பினர்கள் முன்னிலையில் கோட்டா சண்டித்தனம்



**நான் நிறைவேற்று அதிகாரத்தைக்கொண்ட ஜனாதிபதி. எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளேன். இந்நிலையில், நடைமுறையிலுள்ள இந்தச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு எனக்கு எவரும் அழுத்தம் கொடுக்கவும் முடியாது; என்னை மிரட்டவும் முடியாது.**

**- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று தெரிவித்தார்.** ☞2

## அமெரிக்கா கரிசனை



இலங்கையில் மற்றொரு முறை அவசரகால நிலை பிரகடனம்செய்யப்பட்டுள்ளமை குறித்து கரிசனை கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமைதியான முறையில் போராடும் இலங்கையர்களின் குரல்களைச் செவிமடுக்க ☞2

## அவசரகாலச் சட்டத்தை உடன் இரத்துச் செய்க!

### சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை ☞2

## ஐயப்பன் ஆலயத்திலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!



கிளிநொச்சி மாவட்டத்தின் செல்வாநகர் கிராமத்திலுள்ள ஐயப்பன் ஆலய மண்டபத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது. ☞2

### அக்கரைப்பற்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

## இரண்டு சிறுவர்கள் ஆற்றில் மூழ்கிப் பலி

அக்கரைப்பற்று, இறக்காமம் - வாங்காமம் பகுதியிலுள்ள ஆறு ஒன்றில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

நேற்று பிற்பகல் குறித்த ஆற்றில் நீராடச் சென்ற 2 சிறுவர்களும், நீரில் இழுத்துச் செல்லப்பட்டதை அடுத்து, பிரதேச வாசிகள் அவர்களை மீட்டு அக்கரைப்பற்று வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். ☞2

## அவசரகாலச் சட்டம் அறவே வேண்டாம்!

### இ.தொ.கா. வலியுறுத்து



நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள சூழலிலும் அதிலிருந்து மீள்வதற்கான உதவிகளை சர்வதேசநாடுகளிடம் இலங்கை கோரிக்கொண்டிருக்கும் தருணத்திலும் அவசரகாலச் ☞2

## 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு திங்கள் முதல் 4ஆவது தடுப்பூசி

இலங்கையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நான்காம் கட்ட கொரோனாத் தடுப்பூசி அதாவது இரண்டாவது பூஸ்டர் டோஸ் வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டாவது பூஸ்டர் டோஸ் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அவசியம் வழங்கப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். இருப்பினும், இரண்டாவது பூஸ்டர் டோஸ் 20 தொடக்கம் 60 வயதுக்குட்பட்டவர்களுக்கு உகந்தது என்று அவர் மேலும் கூறினார்.

மீதமுள்ள 80 லட்சம் டோஸ்களை 4 ஆவது கொரோனாத் தடுப்பூசியாகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்த சுகாதார அமைச்சர், இரண்டாவது பூஸ்டர் டோஸுக்குப் புதிதாக மருந்துகள் கொள்முதல் செய்யப்படமாட்டாது என்றும் கூறினார். ☞2

## ரணிலுக்கும் எதிர்ப்பு; வீடு முன் ஆர்ப்பாட்டம்

### போராட்டக்காரர்களுடன் திங்கள் அவர் பேச்சு



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவின் கொழும்பிலுள்ள வீட்டுக்கு முன்பாக இன்று முற்பகல் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அரசைப் பாதுகாக்க முற்படும் ரணிலும் வீடு ☞2

# இந்தியா செல்ல முயன்ற 12 பேர் இன்று மன்னார்க் கடலில் கைது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.07

மன்னாரில் இருந்து தமிழகத்திற்கு அகதிகளாகத் தப்பிச் செல்ல முற்பட்ட 12 பேர் இன்று அதிகாலை மன்னார் கடலில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பேசாலை மற்றும் மடுப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## அவசரகாலச் சட்டம் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம் அமுல்படுத்தப்படுவதானது நாட்டில் ஒரு சரியான சட்டம், ஒழுங்கு இல்லை என்பதை அரசு வெளிப்படுத்துகின்றது.

- இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் போர் முடிவுக்கு வந்த பிறகு பல சர்வதேச நாடுகளால் அவசரக்காலச் சட்டம் இலங்கையில் தொடரக் கூடாது என்றும், அது ஜனநாயகத்துக்கு எதிரானது என்றும் வலியுறுத்தப்பட்டு வந்தது. அதன் காரணமாக கடந்த காலங்களில் அவை சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக மீளப்பெறப்பட்டன.

எமது நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் வரிசையில் இருந்து எரிபொருள், அத்தியாவசியப் பொருள்கள், காஸ் உட்பட ஏனைய தேவைகளை நிவர்த்தி செய்துகொள்ள முடியாத யுகமொன்றே உருவாகியுள்ளது.

எதிர்வரும் சில மாதங்களில் இந்த நெருக்கடிகள் மேலும் அதிகரிக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்தத் தருணத்தில் உலக வங்கி உட்பட பல சர்வதேச நாடுகளிடம் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான தீர்வுகளை இலங்கை உதவி கோரி வரும் இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளமையால் நாட்டின் மீது உள்ள அபிப்பிராயத்தை சர்வதேச நாடுகளுக்கு மத்தியில் இழக்க நேரிடும். இதனால் எமது நாட்டுக்கு சர்வதேச ரீதியாக கிடைக்கும் அனைத்து உதவிகளும் தாமதமாகும் அபாயமும் எழுந்துள்ளது.

இந்த அவசரகால பிரகடனத்தால் இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை முற்றிலும் குறைவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் டொலர் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும்.

எனவே, அரசு எதிர்காலத்தில் இவ்வாறான முடிவுகளை எடுக்கும்போது நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சியினர், முப்படையினர், சிவில் அமைப்பினர் ஆகியோருடன் கலந்து ஆலோசித்தே முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

மேலும் இன்று நாட்டில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களைத் தீவிரவாதிகள் முன்னெடுக்கவில்லை. அரசு ஆட்சிக்கு வர வேண்டுமென வாக்களித்த மக்களால்தான் முன்னெடுக்கப்படுகின்றன.

மக்களால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களுக்கு அரசு செவிசாய்த்து மக்களுடன் கலந்துரையாடி ஒரு சிறந்த தீர்வை வழங்குவதே சிறந்ததாகும். எனவே, அவசரகாலச் சட்டத்தை அரசு உடனடியாக மீள்பரிசீலனை செய்ய வேண்டும். - என்றுள்ளது.

## இரண்டு சிறுவர்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், அவர்கள் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று மருத்துவமனை அறிக்கையை மேற்கோள்காட்டி பொலிஸ் ஊடகப்பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 வயது சிறுமியும், 6 வயது சிறுவனும் இதன்போது உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பில் இறக்காமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஐயப்பன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

43 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான லாலசிங்கம் என்ற வர்த்தகரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 60 வயதுக்கு மே ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு குறித்து கருத்துத் தெரிவித்த அவர், அனைத்து வைத்திய நிபுணர்களும் வர்த்தக நாமங்களுக்குப் பதிலாக பொதுவான பெயர்களுடன் மருந்துச்சீட்டுகளை எழுதுமாறு கேட்டுக்கொண்டார்.

புற்றுநோய் வைத்தியசாலைகள், லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலை மற்றும் காசல் வீதி பெண்கள் வைத்தியசாலை ஆகியவை கடுமையான மருந்துத் தட்டுப்பாட்டைச் சந்தித்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரணிலுக்கும் எதிர்ப்பு; .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்ல வேண்டும் எனப் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

ரணிலின் வீடு அமைந்துள்ள பகுதியில் நேற்று மாலை முதல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இன்று காலையும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து மற்றுமொரு தரப்பினர் அப்பகுதிக்கு வந்தமையால் சிறு பதற்ற நிலைமை உருவானது.

அதேவேளை, தன்னுடன் பேச்சு நடத்த திங்களன்று கட்சித் தலைமையகம் வருமாறு போராட்டக்காரர்களுக்கு ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

## அவசரகாலச் சட்டத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணிகள் சங்கம் விசேட அறிக்கையொன்றை இன்று வெளியிட்டுள்ளது.

அதேவேளை, நாட்டு மக்கள் அமைதியாக போராடிவரும் நிலையில், எதற்காக அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது என்பது குறித்து தெளிவுபடுத்தப்பட வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பொறுப்புக்கூற வேண்டியவர்கள் திங்கட்கிழமை, ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படுவார்கள் எனவும் மேற்படி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் இலங்கையில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் வெளிநாட்டுத் தூதுவர்களும், இராஜதந்திரிகளும் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

## அமெரிக்கா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இன்று காலை தனது உத்தியோகபூர்வ டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையர்கள் தற்போது எதிர்கொள்ளும் உண்மையான சவால்களுக்கு முகம் கொடுத்து நாட்டை மீண்டும் செழிப்பானதாகக் கட்டியெழுப்ப வேண்டும். அவசரகாலச் சட்டம் இதற்கு உதவாது என்றும் அமெரிக்கத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மிரட்டவும் முடியாது; ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் போராட்டங்களை அடக்குவதற்காக அவசரகாலச் சட்டத்தை நான் அமுல்படுத்தவில்லை. போராட்டம் என்ற பெயரில் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக அனைத்துச் சட்டங்களும் பாயும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

எனக்கு எதிராக எவரும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம்; போராட்டங்களையும் நடத்தலாம். ஆனால், என்னைப் பதவியிலிருந்து எவரும் விரட்ட முடியாது. 5 வருட மக்கள் ஆணைக்கமைய நான் ஜனாதிபதி பதவியில் நீடிப்பேன் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி மீண்டும் அமுல்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் அரசுக்கு எதிராகப் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார்.

இதற்கு உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கடும் கண்டனங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களின் அறவழிப் போராட்டம் மீது கைவைக்க வேண்டாம் எனவும் அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஸ்ரீலங்காபொதுஜன முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று நடத்திய விசேட சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட 'மொட்டு'வின் சிரேஷ்ட உறுப்பினர்களில் சிலர் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டமைக்கு எதிராகக் கருத்துக்களையும் முன்வைத்தனர். எனினும், கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரினதும் வாய்களையும் மூடும் வகையில் ஜனாதிபதி மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

## எதற்கும் அஞ்சவே ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையிலேயே காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மேற்கண்டவாறு அறிவித்துள்ளனர்.

இதேவேளை, அறவழிப் போராட்டம் மீது கைவைக்க வேண்டாம் எனப் பல தரப்பினரும், அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அவசரகாலச் சட்டத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில், அமைதியான கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமையை அனுபவிக்கும் குடிமக்கள் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், இது நாட்டின் ஜனநாயகத்துக்குக் கிடைத்த பெருமையாகும். அப்படியானால், அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துவது ஏன் அவசியம் என்பதைப் புரிந்துகொள்வது கடினமானது எனக் கனேடியத் தூதுவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம் பாரியளவில் வெடித்துள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டவர்கள் உடன் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி மக்கள் போராட்டங்கள் வெடித்துள்ள நிலையில், நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அவசரகால நிலைப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அவசரகாலம் - அமிலப் பரீட்சை

**பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தி இருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

**இதனால் முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் விரிவான அதிகாரங்கள் பல கிட்டியிருக்கின்றன. நாட்டின் இன்றைய நிலைமைக்கான – அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கான – பிரதான காரணங்களில் ஒன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குக் கட்டு மட்டில்லாத அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாகும்.**

**அந்த நெருக்கடி நிலைமையால் ஏற்பட்டிருக்கும் இக்கட்டுச் சூழலைக் கையாள்வதற்கும் அந்த சர்ச்சைக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்த விழைகிறார் ஜனாதிபதி. இது ஆபத்தான காரியம். நெருக்கடியான சமயங்களில் அவற்றை கையாள்வதற்காக விசேடமான இந்த அதிகாரங்களைப் பயன்படுத்தும் உரித்து ஜனாதிபதிக்கு உண்டு. ஆனாலும் அதற்கும் கூட சில கட்டுப்படுத்தல்கள், மட்டுப்படுத்தல்கள் உள்ளன.**

**இத்தகைய அவசரகால விதிமுறைகளை ஜனாதிபதி பிரகடனப்படுத்தி, அந்த அதிகாரங்களைக் கையில் எடுத்தாலும், அடுத்த 14 நாள்களுக்குள் நாடாளுமன்றத்தில் அதனை விவாதத்துக்கு உட்படுத்தி, அதுதொடர்பான அங்கீகாரத்தை பிரேரணையொன்றை நிறைவேற்றுவதன் மூலம் ஜனாதிபதி பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லையேல் – அத்தகைய பிரேரணையை நிறைவேற்றத் தவறினால் அல்லது பிரேரணை தோற்றால் – ஜனாதிபதியின் அவசரகாலப் பிரகடனம் செயலிழந்துவிடும்.**

**அப்படி பிரேரணையை நிறைவேற்றினாலும் கூட, அவசரகால நிலை அதிலிருந்து ஒரு மாதத்திற்குத் தான் செல்லுபடியாகும். அதனால், அவசரகால நிலையை நீடிக்கும் புதிய பிரேரணை மாதம்தோறும் திகதி பிசகாமல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால்தான் அந்த அவசரகால நிலைமை சட்டரீதியாக தொடரும்.**

**கடந்த பெப்ரவரியில் இந்த அரசியல் குழப்பம் ஏற்பட்டதை அடுத்து, இது போல ஒரு தடவை அவசரகால நிலைப் பிரகடனத்தை ஜனாதிபதி செய்தார். அது மாத்திரமல்ல அந்த அவசரகால நிலைமையின் கீழ் நாடு முழுவதிலும் 36 மணி நேர தொடர் ஊரடங்கு உட்பட இரண்டு ஊரடங்கு உத்தரவுகளையும் ஜனாதிபதி பிறப்பித்து நடைமுறைப்படுத்தினார்.**

**எனினும், அப்போது ஏற்பட்ட அரசியல் நெருக்கடியில் அவரது ஆளும் பொது ஜன பெரமுன கூட்டு, இரண்டு, மூன்று கன்னைகளாகப் பிரிந்து குழம்பிக் கிடந்தது. அச்சமயத்தில் அவசரகால நிலைமைப் பிரகடனத்தை அங்கீகரிக்கக் கோரும் நாடாளுமன்றப் பிரேரணை தோற்கடிக்கப்படலாம் என்று கருதப்பட்டது. அதனால் அந்த அவசரகால நிலைமைப் பிரகடனத்தை ஒரு வாரத்திலேயே – அது நாடாளுமன்றத்தில் அமிலச் சோதனையைச் சந்திக்க முன்னரே – வாபஸ் வாங்கினார் ஜனாதிபதி.**

**எனினும் அவர் அப்போது பிரகடனம் செய்த அவசர கால நிலைமை மற்றும் அதன் கீழான ஊரடங்கு உத்தரவுகளுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் விசாரணைக்கு ஏற்கப்பட்டு, இப்போதும் நிலுவையில் இருக்கின்றன.**

**தற்போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகால நிலை உத்தரவுக்கு எதிராகவும் நாட்டின் முன்னணி பிரமுகர்கள், பிரஜைகள் உயர்நீதிமன்றத்தை நாடுவார்கள் என்பது எதிர்பார்க்கப்படுவதுதான். முன்னைய மனுக்கள் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன என்பதினால் அந்த முன்மாதிரியில் இனிமேல் தாக்கலாகும் அதுபோன்ற மனுக்களும் விசாரணைக்கு பெரும்பாலும் ஏற்கப்படும். அது மாத்திரமல்ல, இரண்டு வகை மனுக்களும் ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

**நேற்று ஆறாம் திகதி இச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வரும் 17ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது, அடுத்த மூன்று நாள்களுக்குள் – 19ஆம் திகதிக்கு முன்னர் – இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் அலசப்பட்டு முடிவெடுக்கப்பட வேண்டியிருக்கும். இப்போதும் கூட அவசர கால நிலையை நாடாளுமன்றத்தில் அங்கீகரிப்பது அரசுக்கு அமிலப் பரீட்சையாகத்தான் இருக்கும்.**

# அரசு தொடர்பாக சர்வதேசத்துக்கு எந்தவித நம்பிக்கையுமில்லை!

## லக்ஷ்மன் கிரியெல்ல சாட்டை

65 பேர் கொண்ட எதிர்க்கட்சி அரசாங்கம் அமைத்தால் முதலாவது வரவு – செலவுத் திட்டத்திலேயே தோற்கடிக்கப்படலாம்.

அதனால் எதிர்க்கட்சிக்கு அரசாங்கம் அமைக்குமாறு தெரிவிப்பது நடைமுறைச் சாத்தியமான தீர்வல்ல என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

அத்துடன் அரசாங்கம் தொடர்பாக எந்த நம்பிக்கையும் சர்வதேசத்துக்கு இல்லை. அதனால் மக்கள் ஆணையை வெளிப்படுத்த இடமளிக்கப்படவேண்டும்.

அத்துடன் நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுக்காவிட்டால் சபாநாயகரான உங்களது வீட்டை மக்கள் முற்றுகையிடுவார்கள் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷமன் கிரியெல்ல சபையில் எச்சரித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பில் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே லக்ஷமன் கிரியெல்ல இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்–

வெளியில் இருந்து மக்கள் தெரிவிக்கும் விடயங்கள் இந்த நாடாளுமன்றத்தில் பிரதிபலிக்கின்றனவா என்பது தொடர்பாக நாங்கள் அனைவரும் மனச்சாட்சியைத் தொட்டுக் கேட்கவேண்டும்.

மக்களின் பிரச்சினைக்கு அரசாங்கம்தான் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் எதிர்க்கட்சியின் தீர்வு என்ன என கேட்கமுடியாது.

உலகில் எந்த நாடாளுமன்றத்திலும் எதிர்க்கட்சியிடம் தீர்வு கேட்பதில்லை. அதே போன்று எங்களை அரசாங்கம் அமைக்குமாறு ஆளும் தரப்பினர் கோரி வருகின்றனர். எமக்கு அரசாங்கம் அமைக்க முடியாது.

ஏனெனில் எங்களுக்கு 65 பேரே இருக்கின்றனர். அவ்வாறு நாங்கள் அரசாங்கம் அமைத்தால் முதலாவது வரவு – செலவுத் திட்டத்திலேயே எமது அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டுவிடும்.

ஆட்சி அமைக்க மக்கள் ஆணை கிடைத்தால் அதனை செய்ய வேண்டும். முடியாவிட்டால் அரசாங்கம் பதவி விலகவேண்டும். அவ்வாறு இல்லாமல் எதிர்க்கட்சிக்கு அரசாங்கம் அமைக்குமாறு தெரிவிப்பது நடைமுறைச்சாத்தியமான தீர்வல்ல.

அத்துடன் ஆங்கில பத்திரிகை ஒன்று மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் 96 வீத மானவர்கள் கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் எனத் தெரிவித்திருக்கின்றது. இதனையே வீதியில் போராடும் மக்களும் தெரிவிக்கின்றனர்.

இளைஞர்களின் எதிர்காலம் வீணடிக்கப்பட்டுள்ளது. இதற்கு தீர்வை அரசாங்கம் வழங்கவேண்டும். அதனால் நாங்கள் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவந்திருக்கின்றோம். நம்பிக்கையில்லா பிரேரணைக்கு பின்னர் நாங்கள் நாடாளுமன்றத்துக்கு வருகின்றமை தொடர்பாக தீர்மானம் எடுக்கவேண்டி வரும்.

சுதந்திரம் அடைந்தது முதல் நாட்டை ஆட்சிசெய்த எந்த அரசாங்கமும் நாட்டை வங்குரோந்து நிலைக்கு ஆக்கவில்லை. ஆனால் இந்த அரசாங்கம் நாட்டை வங்குரோந்து அடையச்செய்துள்ளது. நாட்டை வங்குரோந்து அடையச்செய்திருக்கும் இந்த அரசாங்கத்துக்கு நாட்டை நிர்வகிக்க எந்த அதிகாரமும் இல்லை. அரசாங்கம் தேசிய, சர்வதேச ரீதியில் பொய்யாக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் தொடர்பாக எந்த நம்பிக்கையும் சர்வதேசத்துக்கு இல்லை. அதனால் மக்கள் ஆணையை வெளிப்படுத்த இடமளிக்கவேண்டும். மக்கள் ஆணை மூலம் அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டால், அந்த அரசாங்கத்துக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாண மக்கள் ஒருவருடம்வரை காலம் வழங்குவர்.

புதிய அரசாங்கத்துடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ள சர்வதேச நாடுகளும் விரும்புகின்றன. எனவே நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு இதுவே தீர்வாகும். எமது நிலைப்பாடும் இதுவாகும்.

அதேபோன்று நாட்டை வங்குரோத்து அடையச்செய்த அரசாங்கத்துக்கு என்ன தண்டனை என நீதி அமைச்சரிடம் கேட்கின்றோம். ஜனாதிபதிக்கு ஜனாதிபதி செயலகத்துக்கு செல்ல முடியாது. அவர் எங்கு இருக்கின்றார் எனத் தெரியாது. பிரதமர் வீட்டுக்குள் அடைக்கப்பட்டுள்ளார்.

எமது நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுக்காவிட்டால் சபாநாயகரான உங்களது வீட்டை மக்கள் முற்றுகையிடுவார்கள். அதனால் அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவேண்டும். – என்றார்.



# இலங்கையை அழிக்காமல் உடன் பதவி விலகுங்கள்!

## கொந்தளித்தார் சங்கக்காரவின் மனைவி

இலங்கையை அழிக்காமல் உடனடியாக பதவி விலகுமாறு இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்காரவின் மனைவி யெஹாலி சங்கக்கார, கோரிக்கை விடுத்துள்ளார்.

காலி முகத்திடல் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேசிய நெருக்கடிக்கு அரசாங்கம் இன்னும் தீர்வை வழங்கவில்லை என்றும், மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் அதிகாரத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மரியுபோலில் நகரில் இருந்து பின்வாங்கின ரஷ்யப் படைகள்



ரஷ்யா- உக்ரைன் இடையே 70 நாள்களுக்கும் மேலாக போர் நடந்து வருகிறது. மரியுபோல், கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனை கைப்பற்றும் முயற்சியில் ரஷ்ய ராணுவம் தீவிரமாக போரிட்டு வருகிறது. மரியுபோல் இரும்பு ஆலைக்கு அடியில் உள்ள சுரங்கப் பாதைகளில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள், வீரர்கள் பதுங்கி உள்ளனர். இரும்பு ஆலையை மீட்பதற்காக போராடும் உக்ரைன் வீரர்கள் இடைவிடாத தாக்குதல்களை எதிர்கொண்டு வருகின்றனர். உக்ரைன் வீரர்கள் ரஷ்யாவிடம் சரணடைய மறுத்து விட்டனர். அவர்கள் இறுதிவரை போர் களத்தில் நிற்பதாக சபதம்செய்துள்ளனர். இந்நிலையில், அமெரிக்க ராணுவ தலைமையகமான பென்டகனின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், ''பெரும்பாலான ரஷ்ய படைகள் மரியுபோலை விட்டு வடக்கு நோக்கி நகர்கின்றன. ரஷ்ய படைகளால் குறிப்பிட்ட அளவில் முன்னேற முடியவில்லை. டான்பாஸ் பிராந்தியத்திலும் ரஷ்யாவுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது," என்றார்.

பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'மரியுபோல் மீது பல நாள்களாக ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது.

தற்போது, இரும்பு ஆலை மீது தாக்குதல் நடத்துவது வரும் மே 9ம் திகதி ரஷ்ய வெற்றி தின விழாவுடன் தொடர்பு உள்ளது. மரியுபோல் முழுவதும் கட்டுப்பாட்டில் வந்து விட்டால் வெற்றி தின விழாவின் போது உக்ரைன் மீதான போரை அதிகாரப் பூர்வமாக அறிவிப்பதற்கு அதிபர் புடின் திட்டமிட்டுள்ளார். அன்றயை தினம் மரியுபோலும் ரஷ்யாவுடன் இணைக்கப்பட வாய்ப்புள்ளது,' என தெரிவித்துள்ளது.

**அமெரிக்கா உளவு தகவல்**

கடந்த மாதம் கருங்கடலில் நிறுத்தப்பட்டு இருந்த ரஷ்ய போர் கப்பலான 'மாஸ்கோவா'வை உக்ரைன் ராணுவம் ஏவுகணைகளை வீசி தாக்கி அழித்து, கடலில் மூழ்கடித்தது. இந்நிலையில், கருங்கடலில் இந்த கப்பல் இருக்கும் இடத்தை உக்ரைன் ராணுவத்துக்கு அமெரிக்காதான் துல்லியமாக தெரிவித்து, தாக்குதல் நடத்த வைத்தது,' என்று பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

**ஐ.நா. வேண்டுகோள்**

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. அதில் பேசிய இதன் பொதுச் செயலாளர் குட்டரெஸ், உலக மக்களின் நலனுக்காக ரஷ்யா உடனடியாக போரை நிறுத்த வேண்டும். ரஷ்யாவின் படையெடுப்பு ஐ.நா. சாசனத்தின்படி உக்ரைனின் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரானது. உக்ரைன், ரஷ்யா மக்களுக்காக மட்டுமல்ல, ஒட்டு மொத்த உலக மக்களுக்காகவும் இந்தப் போர் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும், என்றார்.

## இஸ்ரேல் சுதந்திர தினத்தில் நடந்த தீவிரவாத தாக்குதலில் 3 பேர் பலி

இஸ்ரேல் நாட்டில் நேற்று சுதந்திர தினம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்நிலையில் இலாட் நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 3 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் நான்கு பேர் காயமடைந்தனர். ஆயுதம் ஏந்திய இரு இளைஞர்கள் நடத்திய இந்த தீவிரவாத தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். உள்ளூர் ஊடகங்களின் தகவல்படி, தாக்குதல் நடத்தியவர்களின் கைகளில் துப்பாக்கி மற்றும் கோடாரி இருந்தன.

இருவரும் பூங்காவிற்கு அதிரடியாக நுழைந்து அங்கிருந்த மக்களை சரமாரியாக தாக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஒருவன் மக்களை துப்பாக்கியால் சுட்டான். மற்றொருவன் கோடரியால் தாக்கினான். பின்னர் அங்கிருந்து தப்பி விட்டனர். காயமடைந்த 4 பேரில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. தாக்குதல் நடத்தியவர்களை பொலிஸார்தேடிவருகின்றனர். இஸ்ரேல் பிரதமர் நப்தலி பென்னட், இந்த தீவிரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்.



## கியூபாவில் தீ விபத்து 25 பேர் உயிரிழப்பு

கியூபா தலைநகர் ஹவானாவில் மிகவும் பிரசித்தி பெற்ற பழம்பெரும் ஹோட்டலில் எரிவாயு கசிந்து ஏற்பட்ட விபத்தில் 22 பேர் மரணம் அடைந்த சம்பவம் அந்த நாட்டு மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. சரடோகா என்ற இந்த ஹோட்டல் 90 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஹோட்டல் ஆகும். மிகவும் பிரசித்தி பெற்ற ஆடம்பரமான இந்த ஹோட்டலில் நேற்று திடீரென எரிவாயு கசிந்தது. ஹோட்டலின் சில பகுதிகளில் முழுவதுமாக எரிவாயுவால் நிறைந்த அடுத்த கனமே பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதில் ஹோட்டலில் இருந்தவர்கள், ஹோட்டலுக்கு வெளியே நடந்து சென்று கொண்டு இருந்தவர்கள் என மொத்தம் 22 பேர் மரணம் அடைந்தனர்.

கண் இமைக்கும் நேரத்தில் நடந்த இந்த விபத்தில் ஹோட்டலின் ஒரு பகுதி முற்றிலுமாக சேதம் அடைந்தது. மரணம் அடைந்தவர்களில் கர்ப்பிணியும் ஒரு குழந்தையும் அடங்குவர். இந்த தீ விபத்தில் 64 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இவர்களில் 50 பேர் கவலைக்கிடமாக உள்ளனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஹோட்டல்களுக்கு வெளியே நிறுத்தப்பட்டு இருந்த பேருந்துகள், கார்கள் சேதம் அடைந்துள்ளன. இந்த சம்பவம் வெடி குண்டு தாக்குதல் அல்ல என்று ஹவானா பொலிஸார் கூறியுள்ளனர். எரிவாயு கசிவால் ஏற்பட்ட விபத்து தான் என்பது உறுதியாகி இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்த விபத்து தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




## 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான அமெரிக்க தடுப்பூசியால் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை வரலாம்?

18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு போடப்படும் ஜான்சன்அண்ட்ஜான்சன்தடுப்பூசியைபோடுவோருக்கு ஆபத்தான சூழல் ஏற்பட வாய்ப்புள்ளதாக, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் புதிய எச்சரிக்கை அறிக்கையை வெளியிட்டுள்ளது. கடந்த ஆண்டு டிசெம்பரில் அமெரிக்காவின் தடுப்பூசி ஆலோசனைக் குழு ஜான்சன் அண்ட் ஜான்சன் தடுப்பூசியை 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு போட பரிசோதனை நடத்தியது. கடந்தாண்டு பெப்ரவரியில், ஜான்சன் அண்ட் ஜான்சனின் தடுப்பூசியை, அவசரகால பயன்பாட்டிற்கு போட அனுமதித்தது. ஆனால், இந்தத் தடுப்பூசியைப் போட்டவர்களுக்கு மூச்சு விடுவதில் சிரமம், நெஞ்சுவலி, கால்களில் வீக்கம், வயிற்று வலி, தலைவலி, பார்வை மங்கல் போன்ற பிரச்சினைகள் வந்துள்ளன. அதனால், ஜான்சன் அண்ட் ஜான்சனின் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தைப் பயன்படுத்துவது குறித்து அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் புதிய எச்சரிக்கை அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், '18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஜான்சன் அண்ட் ஜான்சன் தடுப்பூசி போடுவதால், மக்களுக்கு ரத்த உறைவு ஏற்படும் அபாயம் உள்ளது. இதனால் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. சமீபத்தில் எடுக்கப்பட்ட மதிப்பாய்வின் அடிப்படையில், இந்த தகவல்கள் கிடைத்துள்ளன' என்று தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உயிரியல் மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இயக்நனர் பீட்டர் மார்க்ஸ் கூறுகையில், 'இந்த தடுப்பூசியை போடுவதால் ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. அந்த தடுப்பூசியில் டி.டி.எஸ். அளவு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது. இந்த ஆண்டு மார்ச் 18 அன்று, 60 டி.டி.எஸ். வழக்குகளை அடையாளம் கண்டது. அவற்றில் ஒன்பது மிகவும் கடுமையானவை' என்றார். ஜான்சன் அண்ட் ஜான்சன் தடுப்பூசியை பல நாடுகளும் பயன்படுத்தி வரும் நிலையில், தற்போது அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் புதிய எச்சரிக்கை அறிக்கையை வெளியிட்டுள்ளதால் புதிய பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



### ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு

# அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் முதலமைச்சர் ஸ்டாலின் மரியாதை

தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு பொறுப்பேற்று இன்றுடன் ஓராண்டு நிறைவடைகிறது. இதையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவையொட்டி சென்னை மெரினா கடற்கரையில் உள்ள முன்னாள் முதலமைச்சர்களான அறிஞர் அண்ணா மற்றும் கருணாநிதி இருவரதும் நினைவிடங்களில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

# ஜெயலலிதா போன்று ஆட்சி செய்யவிரும்புகிறேன்

### திருச்செந்தூரில் சசிகலா பேட்டி



தற்போது தென்மாவட்டங்களில் ஆன்மீக சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள சசிகலா, அ.தி.மு.க. கட்சிக் கொடி கட்டிய காரில் இன்று காலை திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் விஸ்வரூப தீபாராதனை தரிசனம் செய்ய சென்றார்.

5 அடி உயர வெண்கல வேலினை கோவிலிலுக்கு காணிக்கையாக செலுத்தி தனது வேண்டுதலை நிறைவேற்றினார். சுவாமி தரிசனம் முடித்த பின்னர் சசிகலா ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடினார்.

ஒரு வேண்டுதல் காரணமாகவே வேல் காணிக்கை செலுத்தினேன். விரைவில் அரசியல் பயணத்தை மேற்கொண்டு மக்களை சந்திப்பேன் என்று அவர் தெரிவித்தார்.

அ.தி.மு.கவை கைப்பற்றுவீர்களா? என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, அ.தி.மு.க.வில் தான் இருக்கிறேன் எனவும், எங்கள் கட்சி அ.தி.மு.க. என்றும் பதிலளித்தார்.

அ.தி.மு.க. தலைவர்கள் தன்னை விமர்சிப்பது தொடர்பான கேள்விக்குப் பதில் கூறிய அவர், தொண்டர்கள் தான் தலைவர் ஆகிறார்கள் என பதிலளித்தார்.

தொடர்ந்து தி.மு.கவின் ஓராண்டு ஆட்சி குறித்து பேசிய சசிகலா, இந்த ஓராண்டு கால ஆட்சியில் தி.மு.க. மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. பெண்களுக்கு இரவில் பாதுகாப்பு இல்லை. இரவு 9 மணிக்கு மேல் பெண்கள் தனியே செல்ல முடியவில்லை. இந்த ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டு உள்ளது.

பொலிஸ் நிலையங்களில் தி.மு.கவினரால் கட்டப்பஞ்சாயத்து நடைபெற்று வருவதால் மக்கள் யாரும் நிம்மதியாக இருக்க முடியவில்லை. இதனால் தி.மு.கவின் ஓராண்டு கால ஆட்சியில் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு உள்ளது.

தமிழகத்தில் அரசு அதிகாரிகளும் மக்களுக்கு எதிராக செயல்படுகிறார்கள். இது போன்றசம்பவங்கள் முதலமைச்சரின் கவனத்திற்கு செல்கிறதா இல்லையா என்று தெரியல்லை.

இனி அரசு இதுபோல் நடைபெறாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஜெயலலிதா ஆட்சியில் எந்தக் குறையும் இருந்தது கிடையாது. அதேபோன்று ஆட்சியைகொடுக்கவிரும்புகிறேன், என்றும் சசிகலா குறிப்பிட்டார்.

# அரசுப் பேருந்தில் திடீர் பயணம் செய்த தமிழக முதலமைச்சர் ஸ்டாலின்



தமிழகத்தில் தி.மு.க. அரசு பொறுப்பேற்று ஓராண்டு நிறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காலை கோபாலபுரத்தில் உள்ள தனது தாயார் தயாளு அம்மாள் வீட்டிற்கு சென்று வாழ்த்துப் பெற்றார்.

ராதாகிருஷ்ணன் (ஆ.ர்.கே.) சாலையில் சென்றபோது காரில் இருந்து கீழே இறங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவ்வழியாக வந்த ஒரு அரசுப் பேருந்தில் திடீரென ஏறிப் பயணித்தார்.

முதலமைச்சர் திடீரென ஏறியமையால் பேருந்தில் இருந்த பயணிகள் இன்ப அதிர்ச்சியடைந்தனர். பேருந்து நடத்துநரிடம் பயண விவரம் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர், பெண் பயணி ஒருவரிடம், தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்பட்ட பெண்களுக்கான இலவச பஸ் பயண திட்டம் குறித்து கருத்துக் கேட்டார். அந்த திட்டத்தால் தாங்கள் நல்ல பயன் அடைந்துள்ளோம், என்று நன்றி தெரிவித்த அந்தப் பெண், குறித்த சேவையை வழங்கும் வெள்ளை பலகை பேருந்துகளின் எண்ணிக்கை சற்று குறைவாக உள்ளது. அதை உயர்த்த வேண்டும், என்று கோரினார். அது குறித்து நடவடிக்கை எடுக்கிறேன் எனஉறுதியளித்த முதலமைச்சர், அடுத்த நிறுத்தத்தில் பேருந்துப் பயணத்தை முடித்து பின்னர் காருக்கு திரும்பினார்.

## தி.மு.கவின் ஓராண்டு ஆட்சியில் முக்கிய வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை என அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் விமர்சனம்



தி.மு.கவின் ஓராண்டு ஆட்சி, தமிழக மக்களுக்கு பயன் தராத துன்பங்கள் நிறைந்த துயரமான ஆட்சி என்று அ.தி.மு.க .ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் விமர்சித்துள்ளார்.

அ.தி.மு.க.ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கையில், மக்களுக்கு பயன் தராத துன்பங்கள் நிறைந்த துயரமான ஆட்சி தி.மு.கவின் ஓராண்டு ஆட்சி என்பதை மக்கள் உணர்ந்துவிட்டார்கள். மேலும், தேர்தலின் போது, தி.மு.க .கொடுத்த பொய்யான, போலியான, நிறைவேற்ற முடியாத, சாத்தியமற்ற வாக்குறுதிகளை நம்பி மக்கள் வாக்களித்ததன் விளைவாக தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி துரதிர்ஷ்டவசமாக அமைந்து விட்டது. மக்கள் இன்பங்களை மறந்து துன்பங்களை மட்டுமே அனுபவித்து வருகிறார்கள். தி.மு.க. ஆட்சி அமைந்ததும் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என அறிவித்து, மேடைக்கு மேடை பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், தி.மு.க. ஆட்சி அமைந்து ஓராண்டாகியும் நீட் தேர்வு ரத்து செய்யப்படவில்லை.

இதேபோல, 30 வயதுக்கு உட்பட்ட மாணவர்களின் கல்விக் கடன் ரத்து செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால், ஓராண்டாகியும் தி.மு.க. அரசு இதுகுறித்து வாய் திறக்கவில்லை. மகளிர் எதிர்பார்த்த முக்கியமான வாக்குறுதியான மாதம் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கப்படாததால், மக்கள் அதிருப்தியில் இருக்கிறார்கள். தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மம் மறுபடி வெல்லும் என்பதற்கேற்ப அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வரும், என்று குறிப்பிட்டுள்ளார்.

# அடுக்குமாடி குடியிருப்பில் பயங்கர தீ விபத்தில் 7 பேர் உடல் கருகி சாவு



மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூர் மாவட்டம் ஸ்வர்னா பக் காலனியில் இரண்டு அடுக்குகளை கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. இந்த குடியிருப்பில் பல குடும்பங்கள் வசித்து வருகின்றன.

அந்த அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள ஒரு வீட்டில் இன்று காலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது. வீட்டில் மின்கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீ விபத்து குறித்து தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் கட்டடத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

குடியிருப்பில் சிக்கி இருந்த 9 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். ஆனாலும், இந்த தீ விபத்தில் சிக்கி 7 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த தீ விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்துள்ள பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கு மாகாண கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களின் நியமனங்களை மீளாய்வு செய்யுமாறு கோரிக்கை

## மாகாண கல்விச் செயலாளருக்கு இம்ரான் எம்.பி. கடிதம்



(ஹஸ்பர்)

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் வழங்கப்பட்ட கல்வியியற் கல்லூரி ஆசிரியர் நியமன பாடசாலைகள் குறித்து மீளாய்வு செய்யுமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிழக்கு மாகாணக் கல்வி அமைச் சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத் துள்ளார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சுச் செயலாளருக்கு அவர் நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் அண்மையில் வழங்கப்பட்ட கல்வியியற் கல்லூரி ஆசிரியர் நியமனங்கள் தொடர்பில் பல ஆசிரியர்களின் பெற்றோர்களினால் பல்வேறு குறைபாடுகள் என்னிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அவற்றில் பொதுவாக பின்வரும் விவரங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன:-

தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, போக்குவரத்துப் பிரச்சினைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு இயன்றவரை ஆசிரியர்களின் வசிப்பிடத்திற்கு அண்மையில் உள்ள பாடசாலைகள் வழங்கப்பட வேண்டுமென்பதை கொழும்பு கல்வி அமைச்சு செயலாளர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்று ஊடகங்களில் செய்தி வெளிவந்திருந்தது. இந்நிலையில் கிழக்கு மாகாணத்தில் கல்வியியற் கல்லூரி ஆசிரியர் நியமனம் பல ஆசிரியர்களுக்கு வசிப்பிடத்திலிருந்து வெகுதூரத்தில் வழங்கப்பட்டுள்ளது. சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட பஸ் போக்கு வரத்தின் மூலமே பாடசாலையை சென் றடையக் கூடியதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநராக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா பணியாற்றிய காலத்தில் ஆசிரியைகளுக்கு (பெண்களுக்கு) பஸ் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பாடசாலைகள் வழங்கும் நடைமுறை இருந்தது. எனினும், தற்போது வழங்கப்பட்ட நியமனத்தில் இது கவனத்தில் கொள்ளப்படாமல் ஆசிரியைகள் பஸ் ஸில் இருந்து இறங்கி முச்சக்கர வண்டியில் சில கிலோ மீற்றர்கள் பயணம் செய்து பாடசாலைக்குச் செல்லும் வகையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சில பாடங்களுக்கு குறித்த பாடசாலையில் தேவை இல்லாத போதிலும் அங்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சில பிரதேசங்களில் சில பாடங்களுக்கு வெற்றிடம் நிலவிய போதிலும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் வேறு பிரதேசப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை வேறு பிரதேச ஆசிரியர்கள் அவ்வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சில ஆங்கில ஆசிரியர்கள் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். ஆங்கிலம் கற்பிப்பதாய் இருந்தாலும் விளக்கங்களை சிங்கள மொழியில் செய்ய முடியாத நிலை இந்த ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் சரியாகக் கற்றுக் கொள்ள முடியாத நிலை உருவாகும். என்னிடம் முறையீடு செய்துள்ள ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ள விடயங்களின் சாராம்சமே இவையாகும். எனவே, இந்த விடயங்கள் குறித்து மீள்பரிசீலனை செய்துஅந்தந்தப் பிரதேச ஆசிரியர்களை அவர்களின் வலய வெற்றிடத் துக்கு நியமிக்க முன்னுரிமை கொடுத்து, அங்கு வெற்றிடம் இல்லாவிடின் இயன்றவரை அயல் வலய வெற்றிடங்களுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன். இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையையும், ஆசிரியர்களின் சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு இவ்விடயத்திற்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுப்பீர்களென பெரிதும் எதிர்பார்க்கிறேன்.- இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# சபாரத்தினத்தின் நினைவு நாள் வாழைச்சேனையில் அனுஷ்டிப்பு

(க.கிருபாகரன்)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் முன்னாள் தலைவர் ஸ்ரீ சபாரத்தினத்தின் 36 ஆவது நினைவு தினம் நேற்று வாழைச்சேனையில் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினர் வை.பரராசசேகரத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அமரர் ஸ்ரீ சபாரத்தினத்தின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, திரு விளக்கேற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அத்தோடு நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களால் அமரர் ஸ்ரீ சபாரத்தினம் தமிழ் மக்களின் விடிவுக்காக ஆற்றிய பணிகள் இதன்போது விரிவாக எடுத்துக் கூறப்பட்டன.

# தம்பலகாமம் பிரதேசத்தில் விதைப்பு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஆரம்பம்

(ஹஸ்பர)



திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட வயல் நிலங்களில் சிறுபோக விவசாய செய்கைக்கான தயார்ப்படுத்தல் தற்போது இடம் பெற்று வருகின்றது.

நெற்செய்கை விவசாயத்துக்கான வயல் நிலங்களை இயந்திரம் மூலமாக உழுது நெல் விதைப்பும் இடம் பெற்று வருகிறது.

இதில் கல்மெடியாவ வடக்கு, கல்மெடியாவ தெற்கு உட்பட பல வயல் நிலங்களில் விதைப்பும் பதப்படுத்தலும் இடம்பெறுகின்றன.

இம் முறை அப் பகுதியில் குளத்தை நம்பியே விவசாய செய்கை இடம் பெற்றாலும் மன திருப்தியற்ற நிலை ஏற்பட்டு ஆர்வம் குறைந்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். பசளை தட்டுப்பாடு யூரியாவின் விலை 45 ஆயிரம் ரூபா வரை விலை ஏற்றம் என்பன தங்களைப் பாதித்துள்ளன எனவும் தெரிவிக்கின்றனர்.

சேதனப்பசளை மூலமான கடந்த பெரும்போக நெற் செய்கை வெற்றியளிக்கவில்லை. எனவே அசேதனப் பசளையே தங்களுக்கு மீண்டும் வேண்டும் என்ற கோரிக்கையினையும் முன் வைக்கின்றனர். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உழவுக்கான கூலித் தொகை அதிகரிப்பு, டீசல் பெறுவது கடினம் உள்ளிட்ட பல சவால்களுக்கு மத்தியில் இம் முறை நெற் செய்கையை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.



# இன,மத,மொழி வேறுபாடுகளின்றி அரச அதிபர் பணியை ஆற்றுவேன்

## திருகோணமலையில் ஜயவிக்ரம உறுதி

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான பி.எச்.என்.ஜயவிக்ரம தமது கடமைகளை நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக மாவட்டச் செயலகத்தில் பொறுப்பேற்றார்.

“திருகோணமலை என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டமாகும். பல்லினங்கள் மற்றும் பல மொழிகளை பேசும் மக்களை கொண்ட மாவட்டமாகும். நாடு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்தச்சந்தர்ப்பத்தில்எனக்கு இந்நியமனம்கிடைக்கப்பெற்றுள்ளது. எனக்கு வழங்கப்பட்ட இந்நியமனத்திற்கான பொறுப்புக்களை இன, மத, மொழி வேறுபாடின்றி ஆற்றுவேன்” - என இதன்போது புதிய அரசாங்க அதிபர் உறுதி தெரிவித்தார்.

# பூங்கா திறப்பு நிகழ்வைத் தாமே நடத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள்

திருகோணமலை உவர்மலை பிரதேசத்தில் மக்கள் பாவனைக்காக அமைக்கப்பட்டு அரசியல்வாதிகளினால் திறந்து வைக்கப்படவிருந்த பூங்கா ஆர்ப்பாட்டக்காரர்களால் திறந்துவைக்கப்பட்டது.

திருகோணமலை உவர்மலை பிரதேசத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பூங்கா ஒன்றே நேற்று ஆர்ப்பாட்டக்காரர்களினால் திறந்துவைக்கப்பட்டது.

நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்தின் கீழ் 100 நகர அபிவிருத்தி திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மென் ஓட்டப்பந்தய திட்டம் பொதுப் பூங்கா ஒன்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில யுவனின் வேண்டுகோளுக்கிணங்க நகர அபிவிருத்தி கழிவுப் பொருள் வெளியேற்றம் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் ஆறு கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்டது.அந்தப் பூங்காவே நேற்றைய தினம் ஆர்ப்பாட்டக்காரர்களினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்தப் பூங்கா நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவனின் வேண்டுகோளுக்கிணங்க முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாக மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட இருந்த நிலையில் இப்படி ஆர்ப்பாட்டக்காரர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

திறந்து வைக்கப்பட்ட பூங்காவின் நடுவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரின் படங்கள் பொறிக்கப்பட்ட சவப்பெட்டி ஒன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் எரியூட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# அரசுக்கு எதிரான போராட்டத்தால் சுற்றுலாத்துறை மீண்டும் பாதிப்பு!

## அமைச்சர் பிரசன்ன வேதனை

பொருளாதார நெருக்கடிக்கு இது வரை காலமும் ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பொறுப்புக்கூற வேண்டும்.தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் கலாநிதிகள் மற்றும் பேராசிரியர்கள் மாணவர்களுக்கு வெறுப்பைக் கற்பிக்கிறார்கள்.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தால் சுற்றுலாத்துறை, கைத்தொழில் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தினுடனான பேச்சின் முன்னேற்றம் மீதான விவாதத்தின் போது நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் நிதியமைச்சர் எதையும் மறைக்காமல் நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார். பொருளாதார நெருக்கடிக்கு இதுவரை ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் பொறுப்புக்கூற வேண்டும். அனைத்து தவறுகளின் விளைவும் இன்று அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் ஒரு சில கலாநிதிகள் மற்றும் பேராசிரியர்கள் மாணவர்களுக்கு வெறுப்பினை போதிக்கிறார்கள். பெற்றோர் பாரிய இன்னல்களை எதிர்கொண்டு தங்களின் பிள்ளைகளை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள். மாணவர்கள் ஒருசிலரது தவறான வழிநடத்தல்களைத் தொடர்ந்து வீதியில் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார் பொறுமையுடன் செயற்பட்டார்கள்.

ரம்புக்கனை சம்பவத்தை போன்று அசம்பாவிதம் ஏற்பட்டால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு தழுவிய ரீதியில் திட்டமிட்ட வகையில் ஹர்த்தால் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினையினை தேசிய பிரச்சினையாக கருதி தீர்வு காண சர்வ கட்சி அரசாங்கத்தில் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி, பிரதமர் சகல அரசியல் கட்சிகளுக்கும் உத்தியோகப்பூர்வமாக அழைப்பு விடுத்தார்.

நெருக்கடியான சூழ்நிலையில் ஒத்துழைப்பு வழங்கி பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க சவால்களை ஒருபோதும் ஏற்க போவதில்லை.

அரசாங்கத்திற்கு எதிராக வீதியில் இறங்கி போராடுவதால் டொலர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் ஊடாக டொலர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். அரசாங்கத்திற்கு எதிரான திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டத்தினால் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு சுற்றுலா பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என அந்நாட்டு பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளமை பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் என்பதை மாணவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். – என்றார்.

## பேராசிரியர் பேரின்பநாதன் 45 ஆவது நாள் நினைவு

### யாழ்.பல்கலையில்

யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் பொருளியல் துறை தலைவர் நல்லதம்பி பேரின்பநாதன் அவர்களின் 45 ஆவது நாள் நினைவு தினம் இடம்பெறவுள்ளதுடன் பேராசிரியர் செ.சந்திரசேகரம் எழுதிய ‘இலங்கையின் பொருளாதார நெருக்கடி: 2022 வெளிப்பாடுகள் மூலங்கள் மற்றும் மீட்சிகள்’ எனும் நூலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நாளைமறுதினம் திங்கட்கிழமை மதியம் 2 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறீ சற்குணராஜா, வவுனியா பல்கலைக்கழக வேந்தர் எஸ்.மோகனதாஸ், வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் த.மங்களேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளமையுடன் ஏனைய பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு நினைவுப் பேருரைகளை ஆற்றவுள்ளனர்.

## அவசரகாலச் சட்டத்தை மீளப்பெறுக சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

மக்களின் அடிப்படை உரிமைகளான கருத்து சுதந்திரம், பேச்சு சுதந்திரம், பிரசுர சுதந்திரம் மற்றும் அமைதியாக ஒன்றுகூடும் சுதந்திரம் என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக அவசரகால பிரகடனத்தை மீளப்பெறுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது .

அமைதியான போராட்டங்கள் மற்றும் கருத்து வேறுபாடுகளை நசுக்கவோ அல்லது தன்னிச்சையான கைதுகள் மற்றும் காவலில் வைக்கவோ அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படக் கூடாது என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, போராட்டங்கள் வன்முறையாக இருக்கக்கூடாது என்றும், எல்லா நேரங்களிலும் அமைதியாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியதோடு அவசரகாலச் சட்டத்தை ஏன் பிரகடனப்படுத்தினார் என்பதற்கான காரணங்களைமக்களுக்குஉடனடியாக விளக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

## அடிப்படை உரிமைகள், சுதந்திரங்கள் அவசரகால நிலைமையில் பாதிக்கப்படா!

### நம்புகின்றதாம் மனித உரிமைகள் ஆணைக்குழு

நாடுமுழுவதும் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டமை தொடர்பாகக் கவலையடைவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. போராட்டங்கள் அமைதியானவையாகவும், சாதாரண பொலிஸ் நடவடிக்கைகளின் வரம்பிற்குள்ளும் இருந்ததால் ஏன் அவசரகால சட்டம் பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் கேள்வியெழுப்பியுள்ளது.

எனவே அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டமைக்கான காரணங்களை பொதுமக்களுக்கு விளக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. அத்தோடு அவசரகால நிலையில் கருத்துச் சுதந்திரம் ஒன்று கூடல், கைது உள்ளிட்ட விடயங்களில் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் பாதிக்கப்படா என நம்புவதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு ரங்கநாதனால் மருத்துவ உபகரணங்கள்






கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமாகிய லயன் எஸ்.ரங்கநாதன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு 28 லட்சம் ரூபா பெறுமதியான ஓட்டோ கிளேவ் இயந்திரத்தை அன்பளிப்புச் செய்துள்ளார்.

புலோலி வடமராட்சி லயன்ஸ் கழகம், நெல்லியடி லயன்ஸ் கழகம், வடமராட்சி லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் கோரிக்கைக்கு அமைய கொமர்ஷல் வங்கியின் சமூகப் பொறுப்பு நிதியத்தின் அனுசரணையில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளரும் மோதர மட்டக்குளிய லயன்ஸ் கழக உறுப்பினருமாகிய லயன் எஸ்.ரங்கநாதனால் இந்த உபகரணங்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டன.

லயன் எஸ்.ரங்கநாதன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்தியசாலை, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை ஆகியற்றுக்கும் அந்தந்த லயன்ஸ் கழகங்களின் கோரிக்கைக்கு அமைய ஒருகோடி ரூபாவுக்கு மேற்பட்ட மருத்துவ உபகரணங்களை ஏற்கனவே வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.05.2022இல் வெளியிடப்பெற்றது.